7764

Register Number | | | | | | |

**Part III**

# பொருளியல் / ECONOMICS

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

குறிப்பு : **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக : 14 × 1 = 14

1. செல்வ இலக்கணத்தின் ஆசிரியர்

அ) ஆல்ஃபிரடு மார்ஷல் ஆ) இலயனல் ராபின்ஸ்

இ) ஆடம் ஸ்மித் ஈ) சாமுவேல்சன்.

2. முதலாளித்துவத்தை இயக்கும் அடிப்படை சக்தியாக விளங்குவது

அ) திட்டமிடல் ஆ) தொழில்நுட்பம்

இ) அரசு ஈ) இலாப நோக்கு.

3. சமநோக்கு வளைகோட்டின் அணுகுமுறையை அறிமுகப்படுத்தியவர்

அ) ஆல்ஃபிரடு மார்ஷல்

ஆ) இலயனல் ராபின்ஸ்

இ) J. R. ஹிக்ஸ் மற்றும் R. G. D. ஆலன்

ஈ) ஆடம் ஸ்மித்.

[ Turn over

4. தேவை விதி உணர்த்துவது

அ) விலை, பண்டங்களுக்கு உள்ள தலைகீழ் உறவு

ஆ) விலை, பண்டங்களுக்கு உள்ள நேரடி உறவு

இ) மேற்கூறிய (அ) மற்றும் (ஆ) இரண்டும்

ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

5. அளிப்பை தீர்மானிக்கும் காரணிகள்

அ) உற்பத்தி தொழில்நுட்பம்

ஆ) உற்பத்திக் காரணிகளின் விலைகள்

இ) வரிகளும், சலுகைகளும்

ஈ) இவை அனைத்தும்.

6. சமநிலை விலையில் காலத்தின் பங்கை அறிமுகப்படுத்தியவர்

அ) J. R. ஹிக்ஸ்

ஆ) J. M. கீன்ஸ்

இ) ஆல்ஃபிரட் மார்ஷல்

ஈ) J. S. மில்.

7. உற்பத்தி என்பது

அ) பயன்பாட்டின் அழிவு ஆ) பயன்பாட்டை உருவாக்குதல்

இ) மாற்று மதிப்பு ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

8. சராசரி மாறாச் செலவு இதனால் வகுக்கும் போது கிடைக்கும்

அ) TC/Q

ஆ) TFC/Q

இ) TVC/Q

ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

9. விற்பனைச் செலவின் மிக முக்கியமான வடிவம் என்பது

அ) விளம்பரங்கள் ஆ) விற்பனை

இ) ஒரே மாதிரியான பண்டங்கள் ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

10. போலி வாரம் என்ற கருத்தின் ஆசிரியர்

அ) ஆடம் ஸ்மித் ஆ) மார்ஷல்

இ) ரிக்கார்டோ ஈ) சாமுவேல்சன்.

11. பேரியல் பொருளியல் சிந்தனையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியவர்

அ) டேவிட் ரிக்கார்டோ ஆ) J. M. கீன்சு

இ) ஆடம் ஸ்மித் ஈ) மால்தஸ்.

12. இறுதிநிலை நுகர்வு நாட்டம்

அ) $\frac{\Delta S}{\Delta Y}$

ஆ) $\frac{C}{Y}$

இ) $\frac{\Delta P}{\Delta Q}$

ஈ) $\frac{\Delta C}{\Delta Y}$.

13. பொது மக்களிடம் உள்ள புழக்கப்பணம் என்பது

அ) $M_1$

ஆ) $M_2$

இ) $M_3$

ஈ) $M_4$.

14. அரசினால் விதிக்கப்படும் கட்டாய கட்டணம் என்பது

அ) உரிமம் ஆ) வெகுமதிகள் மற்றும் மானியங்கள்

இ) கடன் ஈ) வரி.

[ Turn over

II. கோடிட்ட இடங்களை நிரப்புக : 12 × 1 = 12

15. நுண்ணியல் என்பது ......................... ஆகும்

16. உற்பத்தி வாய்ப்பு வளைகோடு ......................... எனவும் அழைக்கப்படுகிறது.

17. இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்ஜியமாகும் போது, மொத்தப் பயன்பாடு ......................... ஆகும்.

18. தேவைக்கோடு கீழ்நோக்கி வருவதற்கு காரணம் ......................... .

19. ......................... அளிப்பைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாகும்.

20. நிலமும், உழைப்பும்......................... உற்பத்திக் காரணிகள் ஆகும்.

21. இறுதிநிலை செலவு வளைகோடானது ......................... வடிவத்தில் இருக்கும்.

22. நிறைவுப் போட்டியில் ஒரு நிறுவனம் ......................... .

23. பணக்கூலி என்பது ......................... கூலி என்றும் அழைக்கலாம்.

24. ......................... என்பது மக்களின் கையிருப்பு ( ரொக்கம் ) பணம் ஆகும்.

25. பரிமாற்றச்சமன்பாடு ( $MV = PT$ ) என்பதை அளித்தவர் ......................... .

26. வரி விதிப்பின் அடிப்படை கோட்பாட்டை ......................... என்று அழைக்கிறோம்.

III. கீழ்வருவனவற்றைப் பொருத்துக : 12 × 1 = 12

| | | | |
|---|---|---|---|
| 27. | பொருளாதாரக் கோட்பாடுகள் | அ) | வருவாயும், செலவும் சமமாக இருக்கும் |
| 28. | சந்தை சக்திகள் | ஆ) | மார்ஷல் |
| 29. | ஆடம்பர பண்டங்கள் | இ) | குறைந்த வட்டிவீதம் |
| 30. | தேயிலை மற்றும் காபி | ஈ) | அளிப்பு – தேவை மற்றும் விலை |
| 31. | மிகைத்தேவை | உ) | $\frac{1}{1 - MPC}$ |
| 32. | வேலைபகுப்பு முறை | ஊ) | வைர ஆபரணங்கள் |
| 33. | இலாபம் | எ) | புதிய தொன்மைக்கால கோட்பாடுகள் |
| 34. | முற்றுரிமையாளர் போட்டி | ஏ) | பதிலீட்டுப் பண்டங்கள் |
| 35. | கடன்நிதி கோட்பாடு | ஐ) | E. H. சேம்பர்லின் |
| 36. | $K$ | ஒ) | $D > S$ |
| 37. | மலிவு பணக்கொள்கை | ஓ) | ஆடம் ஸ்மித் |
| 38. | சமச்சீர் நிதிநிலை அறிக்கை | ஔ) | $TR - TC$. |

IV. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக: 12 × 1 = 12

39. பொருளாதாரத்தின் வேறு பெயர் என்ன ?

40. பொது உடைமை பொருளாதாரத்தில் வெற்றி பெற்ற இருநாடுகளைக் கூறுக.

41. சம-இறுதிநிலை பயன்பாட்டு விதிக்கு வேறு பெயர் என்ன ?

42. புள்ளி முறையின் வாய்ப்பாடுகள் என்ன ?

43. காலத்தின் பங்கினை அறிமுகப்படுத்தியவர் யார் ?

44. சமுதாய மாற்றம் காணும் முகவர் யார் ?

45. உறைவடிவ வளைகோடு என்பது என்ன ?

46. முற்றுரிமை மற்றும் முறையிலா வணிகச் சட்டம் ( MRTP ) எந்த ஆண்டு இயற்றப்பட்டது ?

47. சம்பீட்டரின் இலாபக் கோட்பாட்டின் பெயர் என்ன ?

48. J. B. சேயின் சந்தை விதியைக் கூறுக.

49. அருமை பணக்கொள்கை எப்பொழுது கடைப்பிடிக்கப்படுகிறது ?

50. VAT என்றால் என்ன ?

## பகுதி - ஆ

V. *குறிப்புகள் :* i) எவையேனும் **பத்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் *நான்கு* அல்லது *ஐந்து* வரிகளில் அமைந்திட வேண்டும் . 10 × 3 = 30

51. பொருளாதாரத்தின் முக்கியப் பிரிவுகள் யாவை ?

52. எந்த ஒரு சமுதாயத்திலும் காணப்படும் அடிப்படைப் பிரச்சனைகள் யாவை ?

53. பொதுவான பொருளாதார முறைகளின் பெயர்களைக் கூறுக.

54. பயன்பாட்டை வரையறுக்கவும்.

55. தேவையைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை ?

56. சமநிலை விலை என்றால் என்ன ?

57. நீண்டகாலம், குறுகிய காலம் - வேறுபடுத்துக ?

58. வேலை பகுப்பு முறை என்பதன் பொருள் யாது ?

59. உற்பத்தி சார்பு என்றால் என்ன ? வகைப்படுத்துக.

60. வாய்ப்புச் செலவு என்றால் என்ன ?

61. *MC* மற்றும் *AC*-க்கு இடையேயுள்ள உறவுகளைக் கூறுக.

62. நீர்மை விருப்ப கோட்டின் மூன்று நோக்கங்கள் யாவை ?

63. பெருக்கி - குறிப்பு வரைக.

64. இந்தியாவில், பண அளிப்பின் நான்கு கூறுகள் யாவை ?

65. ஆடம் ஸ்மித்தின் புனித வரி விதிகளை கூறுக.

## பகுதி - இ

VI. *குறிப்புகள் :* i) எவையேனும் **ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் *ஒரு பக்க* அளவில் அமைந்திட வேண்டும்.

$6 \times 10 = 60$

66. கலப்புப் பொருளாதாரத்தின் நன்மை தீமைகளை விவரி.

67. அங்காடிக் காலத்தில் சமநிலை விலை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது ?

68. தொழில் முனைவோரின் பணிகள் யாவை ?

69. AR மற்றும் MR கோடுகளின் இடையேயான உறவுகளை எழுதுக.

70. இறுதிநிலைச் செலவினை சரியான விளக்கத்துடன் கூறுக.

71. நிறைவுப் போட்டியின் இயல்புகளை விளக்கவும்.

72. சேயின் அங்காடி விதியின் குறைபாடுகளைக் கூறுக.

73. நுகர்வுச் சார்பை வரைப்படத்துடன் விளக்குக.

74. வரிவிதிப்பு கொள்கையினை விவரி.

75. நேர்முக வரி மற்றும் மறைமுக வரியை வேறுபடுத்திக் காட்டுக.

[ Turn over

## பகுதி - ஈ

VII. *குறிப்புகள் :* i) எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் *மூன்று பக்க* அளவில் அமைந்திட வேண்டும்.

$3 \times 20 = 60$

76. பொருளாதார விதிகளின் தன்மை மற்றும் முக்கியத்துவத்தை விவரிக்கவும்.

77. குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியினை படம் வரைந்து விளக்குக.

78. தேவை விதியினை விவரமாக எழுதுக.

79. குறுகிய காலத்தில் நிறைவு போட்டியில் விலை, பண்டத்தின் அளவு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன ?

80. ரிகார்டோவின் வாரக் கோட்பாட்டை ஆராய்க.

81. பணக் கொள்கையின் நோக்கங்கள் மற்றும் கருவிகளை விவரி.